உ

# அருள் ஒளி



135


## மகோற்சவ சிறப்பு மலர்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை.

2018

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
# திருமஞ்சத் திருவிழா 18-08-2018



உ



# அருள் ஒளி

( மாதாந்த சஞ்சிகை )

ஆசிரியர்
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்
திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்

ஆவணி மாத மலர்
2018

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

பதிவு இல.: ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019-3

e-mail : thurkaiammantemple@gmail.com
face book : tellidurga@gmail.com


## சிவனொளிபாத மலையின் பெயர் மாற்றம்

இலங்கையில் உள்ள மிகப் பிரசித்தமான யாத்திரைத் தலமாக விளங்கும் சிவனொளிபாதமலையின் பெயரை "புத்த ஸ்ரீ பாத ஸ்தானம்" என்று சமீபத்தில் மாற்றியிருப்பது சைவத்தமிழர்களுக்கு வேதனைதரும் செய்தியாகும். சைவமக்களின் வரலாற்றுத் தலங்களை தொடர்ந்து அபகரிக்கும் அநீதி தொடர்கிறது. திருகோணமலை கன்னியா வெந்நீரூற்று இன்று பௌத்த நிலையத்தோடு தொடர்புபடுத்தி, அங்கிருந்த விநாயகர் கோவிலையும் அழித்துள்ளமை மறக்கமுடியாத துயரச்செய்தியாகும்.

சகல பாடப்புத்தகங்களிலும் இதுவரை சிவனொளிபாத மலை என்று படித்த தமிழர்களின் சிந்தையை வேதனைப்படுத்தும் இத்தகைய செயல்கள் இன ஒற்றுமைக்கு எவ்வாறு வழிகோலப்போகிறது. எமக்காகக் குரல் கொடுக்க யாருமில்லாத நிலையை சிங்கள அரசியல்வாதிகள் இன்று நன்கு அறிந்து செயற்படத்தொடங்கியுள்ளனர். இந்நிலை தொடருமானால் தமிழர் உரிமைப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு கிடைக்கப்போகிறது. பௌத்த மதத்தின் மூலவராக விளங்கும் புத்தபிரான் புனிதமானவர். பற்றுக்களை உதறியவர். அவரது சமயச்சிந்தனைகளைச் சரியாக விளங்கிக்கொண்டவர்கள் இவ்வாறான தவறுகளைச் செய்யமாட்டார்கள்.

சைவத்தமிழர்கள் தம் பாரம்பரியங்களை காப்பதற்கு ஒன்றுபட்டு முயற்சிக்க வேண்டும். சைவமக்களின் அமைப்புக்கள் ஒன்றுபட்டு குரல்கொடுக்க வேண்டும். போர்க்காலத்தைப் பயன்படுத்தி மதம் மாற்றத்தொடங்கிய அந்நிய மதங்கள் இன்றும் தம் தந்திர வேலைகளால் ஏழைச் சைவ மக்களை மதம் மாற்றுவது தொடர்கிறது. யார்க்கு எடுத்துரைப்பது? எல்லா வழிகளிலும் ஒட்டுமொத்தப் பாதிப்பு சைவத் தமிழர்க்கே. இறைவன் தான் ஏதோ வடிவில் எம்மைக் காக்கவேண்டும்.

– ஆசிரியர்



**ஸ்ரீ துர்க்காதேவியின் தென்திசைக் கோபுரத் தோற்றம்**

# ஆலயப் பண்பாட்டில் மகோற்சவம்

**பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
வாழ்நாட் பேராசிரியர்,
யாழ். பல்கலைக்கழகம்.

சிவாகமங்கள் வகுத்துக்கூறும் ஆலய வழிபாட்டு மரபில் கிரியைகள் மூன்று வகையாக வகுக்கப்பட்டுள்ளன. இவை நித்திய கிரியைகள், நைமித்தியக் கிரியைகள், காமியக் கிரியைகள் எனப் பெயர் பெறுகின்றன. தினமும் இறைவனுக்கு நிகழும் பூசைகள் உள்ளிட்ட கிரியைகள் நித்தியக் கிரியைகள். நிமித்தம் என்ற ஒரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டு நிகழ்வது நைமித்தியக் கிரியை. ஏதாவது ஒரு பலனை அவாவிச் செய்யப்படுவது காமியக் கிரியை ஆகும். பக்தர்களை இறைவழிபாட்டோடு இணைக்கும் கிரியையாகிய பூசை என்பதன் விரிந்த நிலையையே ஆகமக் கிரியை சுட்டி நிற்கின்றது. கிரியைகள் எத்தகைய நிலையில் இடம்பெறினும் அவற்றின் உயர்ந்த குறிக்கோள் வழிபடுவோனது உள்ளத்தில் சமயஞ் சார்ந்த ஞானத்தை உதிக்கச் செய்து ஆத்மீக விழிப்புணர்வை ஏற்படுத்துவதேயாகும் எனில் மிகையில்லை. "கிரியையென மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" எனச் சைவசித்தாந்த சாஸ்திரம் போற்றுகின்றது. ஆலய வழிபாடு அனைவருக்கும் இன்றியமையாததொன்று. ஞான நிலையில் உயர் நிலையை அடைந்தவர்க்கும் கோயில் வழிபாடு மிக அவசியமென்பது ஆகமத்தின் நெறிமுறையாகும்.

ஆலயக் கிரியைகள் ஆன்மார்த்தம், பரார்த்தம் என்ற நிலையிலும் சிறப்புப் பெறுகின்றன. தன் நன்மை கருதிச் செய்யப்படும் கிரியை ஆன்மார்த்தம் எனவும் அனைத்து உயிர்களின் நன்மை கருதிச் செய்யப்படுவது பரார்த்தம் என்றும் விளக்கம் தரப்படுகின்றன. இறைவனை வழிபடுவதற்குரிய இடத்தினைத் தேர்தல், அங்கு கோயிலை நிர்மாணித்தல், அதன்பின் வழிபாட்டிற்குரிய இறைவனது திருவுருவத்தைப் பிரதிஷ்டை செய்தல், அதனைத் தொடர்ந்து நித்திய பூசைகளும் நைமித்திகப் பூசையாகிய உற்சவத்தையும் நிகழ்த்துதல், தெரிந்தோ தெரியாமலோ ஏற்படும் தவறுகளை விலக்கி மீண்டும் தெய்விகத் தன்மையை ஏற்படுத்தலாகிய பிராயச்சித்தம் ஆகியவை ஆகமங்கள் கூறும் கிரியைகளில் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என வகுக்கப்பட்டுள்ளன. மந்திரம், கிரியை, பாவனை ஆகிய செயல்களுடன் கூடியவையே சமயத்துறையில் கிரியை என்ற சொல் குறிப்பிடுகின்றது. கிரியைகளை ஒழுங்காகச் செய்வதிலும் அவற்றில் பங்கு கொள்வதிலும் ஒருவருக்குக் கிடைக்கும் பலன் அதிகமாகும். இம்மையில் அறம், பொருள், இன்பம் ஆகிய வாழ்வியல் நலன்களைப் பெறுவதற்கும்

மறுமையில் வீடுபேற்றினைப் பெறவும் இவை உதவுகின்றன. இவை யாவற்றுக்கும் மேலாக ஆலயக் கிரியைகள் மூலம் ஒருவருக்குச் சாதனைத் திறனும் சமய ஞானமும் ஒழுக்கமும் சித்திக்கின்றது.

ஆலயத்தில் நிகழும் நித்திய கிரியைகளின் போது ஏற்படும் குற்றங்களையும் நிவர்த்தி செய்து நநன்மையை ஏற்படுத்துவதே நைமித்திகக் கிரியையாகிய உற்சவமாகும். உற்சவம் (உத் + சவம்) என்ற சொல்லுக்குப் பல விளக்கங்கள் கூறப்படுகின்றன. "உத்" என்பது "மேலான்" என்ற பொருளையும், "சவம்" என்பது "ஐந்தொழில்" என்ற பொருளையும் தருவது. மற்றும் ஒரு கருத்தும் உள்ளது. "உத்" என்பது ஞானத்தையும் "சவம்" என்பது போகமோட்சத்தையும் குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது. இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களையும் நிகழ்த்தி, உயிர்களைக் காக்கும் முறையைத் திருவிழா என வழங்கப்பெறும் உற்சவம் உணர்த்துகின்றது. உயிர்களின் பக்குவ நிலையை வருவித்தற்கு உற்சவம் சிறப்பாக வழியமைக்கின்றது. உயிர்கள் தெரிந்தோ, தெரியாமலோ செய்யும் வினைத் திட்பத்தால் நல்வினை, தீவினை வயப்பட்டு உழலுகின்ற நிலையில் எல்லா வினைகளையும் தமது திருவருட் பார்வையால் அக்றறி ஆணவமாகிய படலங் கிழித்துத் தன்மயமாக்கும் தனிப்பெருங் கருணைப் பொழிவே உற்சவம் என்ற சிறப்புப் பொருளும் உண்டு. ஆலயத்தில் உற்சவம் நித்தியோற்சவமாக அமைவதோடு வாரம், பக்ஷம், மாதம் முதலிய காலங்களில் அவ்வவ்போதும், ஆண்டு தோறும் குறித்த விசேட தினத்தை அந்தமாகக் கொண்டு நிகழுங்கால் மகோற்சவம் எனவும் பிரமோற்சவம் எனவும் பெயர் பெறுகின்றது.

உற்சவம் சாகல்யம், பாவனம், சாந்தி மாங்கல்யம் என நான்கு வகைப்படும். கொடியேற்றமாகிய துவஜாரோகணம் தொடங்கித் தீர்த்தவிழாவை முடிபாகக் கொண்டது சாகல்யம் ஆகும். கொடியேற்றம் மாத்திரமன்றி மற்றெல்லாக் கிரியைகளையும் சாகல்யத்துக்குக் கூறியபடி நிகழ்த்தப்படுவது பாவனம் எனப்படும். காலையில் ஓமமும் பலியும் சாயங் காலத்தில் உற்சவமும் செய்வது சாந்தி என்னும் உற்சவமாகும். எசமானும் குருவும் ஒரு தினத்தை அந்தமாகக் கொண்டு செய்யும் உற்சவம் மாங்கல்யம் எனப்படும்.

இவற்றுள் சாகல்ய உற்சவமானது ஒன்பது பேதங்களைக் கொண்டது. 27 நாட்கள் உற்சவத்தைக் கொண்டது சௌரம், 17 நாட்கள் கொண்ட உற்சவம் சாக்திரம், 15 நாட்கள் கொண்ட உற்சவம் சாவித்திரம், 13 நாட்கள் கொண்ட உற்சவம் கௌமாரம், 9 நாட்கள் கொண்ட உற்சவம் தைவிதம், 7 நாட்கள் கொண்ட உற்சவம் பௌவனம், 3 நாட்கள் கொண்ட

உற்சவம் கௌணம், 1 நாள் கொண்ட உற்சவம் சைவம் என உத்தர காரணாகமம் வகுத்துள்ளது.

ஒரு நாள் விழாவானது கோஷணம், கேவலம் என இருவகைப்படும். பேரீதாடனம், ரட்சாபந்தனம் ஆகியவற்றுடன் கூடிய ஒருநாள் விழா கோஷணம் ஆகும். இவை இரண்டுமின்றிச் செய்யப்படும் ஒருநாள் விழா கேவலம் ஆகும். கோஷண உற்சவத்தினால் அனைத்துச் சித்திகளும் கிட்டும். கேவலம் உற்சவம் முத்தியை நல்கும். கருத்தாவின் பிறந்ததினம், அவர் முத்தியடைந்த தினம், சங்கிராந்தி, சதுர்த்தசி, அட்டம், அமாவாசை, அயன புண்ணிய காலம் தனமோற்சவம், கிரகண புண்ணிய காலம், பவித்திரோற்சவம், மாதபூசை, கார்த்திகை தீபம், சிவராத்திரி முதலிய புண்ணிய காலங்களில் ஒருநாள் உற்சவம் செய்யப் பொருத்தமானவை.

இவ்விழா நாட்கள் இறைவனது ஐந்தொழில்களையும் நினைவூட்டுகின்றன. அநுமதி பெறுதல், மண் எடுத்தல், முறையிடுதல், பேரி ஒலித்தல் முதலானவை சிருஷ்டி என்னும் தோற்றத்தைக் குறிப்பன. திருவீதியுலா ஓமம், பலியிடுதல் முதலியன ஸ்திதி என்ற காத்தலைக் குறிப்பன. பரிவேட்டை, தேரூர்தல் சாந்தம் அணிதல் முதலியன சம்மாரம் எனும் ஒடுக்கத்தைக் குறிப்பன. பொடியிடித்தல், நீராட்டு முறைவிடுதல், கொடியிறக்கம் முதலியன திரோபாவம் என்னும் மறைத்தலைக் குறித்து நிற்பன. திருவூடல், பத்தர் விழா, தீர்த்தம், குருவணக்கம் ஆகியவை அனுக்கிரகம் என்ற அருளலைக் குறிப்பன. உற்சவ நாட்களில் இறைவன் மண்டலம், கும்பம், அக்கினி, குரு, சீடன் என்னும் ஐந்து இடங்களையும் கலந்து நின்று அருள்பாலிப்பான் என்பது சிவாகமங்களின் முடிபாகும். அத்துடன் திருவிழாக்கள் சாம்பவதீட்சை எனப்படுகின்றது. அதாவது தீட்சை பெறாதவர்களுக்கும் மற்றும் மிருகம், பட்சி முதலியவற்றுக்கும் இந்தத் திருவிழாக்களைக் காணுதலே இந்தத் தீட்சையாகும். உற்சவம் நடத்துவதன் பயன் உலகத்து உயிர்கள் அனைத்தும் பலன் பெறுவதையும் சாம்பவீ தீட்சை குறிக்கும்.

பிரமோற்சவத்தின் உறுப்புக்கள் பதினெட்டாகும். அவையாவன விருஷயாகம், துவஜாரோஹணம், பிரக்ஷத்தானம், அங்குரம், மகாயாகம், அஸ்திரயாகம், பலிதானம், யானக்கிரமம், பரிவேஷம், விராஜனம், கௌதுகம், தீர்த்த சங்கிரகம், சூர்ணோற்சவம், தீர்த்தம், அவரோஹணம், ஸ்நபனம், விவாகம், பத்தோற்சவம் என்பன. மகோற்சவத்தின்போது விக்நேசுவர வழிபாடு, அநுஞ்ஞை, கிராமசாந்தி, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரட்சாபந்தனம் என்னும் கிரியைகள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. உற்சவகாலத்தில் இறைவன் பிம்பம், தம்பம், கும்பம் ஆகிய மூன்று நிலைகளிலும்

எழுந்தருளி அருள்புரிவான். கோயிலின் கர்ப்ப கிருகத்தில் எழுந்தருளும் மூர்த்தி பிம்பமாகும். நந்திக்குப் பின்னால் இடம்பெறும் துவஜஸ்தம்பம் தம்பமாகும். ஆலயத்தின் கிழக்குக்கும் வடகிழக்கிற்கும் இடையில் அமைந்த யாகசாலையில் கும்பமும் யாகசாலையும் அமையும்.

தம்பத்தில் நிகழும் கொடியேற்று வைபவமே துவஜாரோஹணம் என அழைக்கப்படுகின்றது. கொடிச் சீலையில் அவ்வவ்வாலய மூலமூர்த்திக்கேற்ற அடையாளம் இடம்பெறும். சிவனுக்கு விருஷபமும் சூலமும் இடம்பெறுவன. விநாயகருக்கு மூஷிகமும் அங்குசமும் இடம்பெறுவன. சுப்பிரமணியருக்கு மயூரமும் சக்தியும் இடம்பெறுவன. இவ்வறுடன் கண்ணாடி, பூர்ண கும்பமும் முதலிய அஷ்டமங்கலப் பொருட்களும் இடம்பெறுவன.

கொடியேற்றத்தின் போது விருஷபம், துவஜஸ்தம்பம், பலிபீடம், அஸ்திரராஜர் ஆகியவற்றுக்குப் பிரதிஷ்டைகள் நிகழ்த்தப்படுவது குறிப்பிடற்பாலது. பின்னர் ரட்சாபந்தனம் செய்யப்படும். பேரீதாடனம் என்னுங் கிரியையின் நோக்கம் துவஜாரோஹணம் நிகழப்போவதையும் அதற்குச் தேவர்களைச் சமூகமளிக்க வேண்டுவதையும் பறைசாற்றுவதாகும். உற்சவமூர்த்தியைத் துவஜஸ்தம்பத்திற்கு முன் எழுந்தருளுவித்த பின் கொடிச்சீலையைக் கோவிலை வலமாகக் கொண்டு வருவித்துக் கொடிமரத்தில் உள்ள கயிற்றில் பிணைத்து சமஸ்த தேவதாவாஹனம் என்னுங் கிரியை நிகழத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இக்கிரியையின் மூலம் திருவிழா முடியும்வரை தேவர்கள் அனைவரும் துவஜதண்டத்தில் சாந்நித்தியம் கொண்டருளுமாறு வேண்டப்படுவதாகும். இதனையடுத்துச் சகல வாத்ய கோஷங்களுடன் கொடியேற்றம் நிகழ்ந்து அபிஷேகம், பலி, தூபதீப அர்ச்சனைகள் நிகழ்ந்து, அஸ்திர தேவரை ஆவாகித்து மகா ஆசீர்வாதம் நிகழ்த்தி உற்சவேசரையும் பூசித்து, பின் பிரமசந்தி முதலான சந்தியாவாகனம் நிகழ்த்துதல் முதலிய அம்சமாகும். திக்குகள் அனைத்திலும் அவ்வவ் திக்குக்குரியவரைத் தியானித்து அவரவர்க்குரிய வேதமந்திரம், ராகம், பண், தாளம், வாத்தியம், நிருத்தம் ஆகியவற்றுடன் ஆராதித்தல் முக்கிய அம்சமாகும்.

தினந்தோறும் நிகழும் கிரியைகளில் பக்தர்கள் பக்திபூர்வமாக ஈடுபடும் வாய்ப்புக் கிட்டுகின்றது. தினமும் இருவேளைகளிலும் யாகபூசை, துவஜஸ்தம்பத்திற்கு அபிஷேகம், பூசை, பலி, திக்குகளில் பலி என்பன நிகழும். உற்சவமூர்த்திக்கு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனா நிகழ்ந்து சகல விருதுகளுடனும் வேதகோஷம், திருமுறைப் பாராயணம் முதலியவற்றுடன் இறைவனது திருவுலா நிகழும். சுவாமி ஈசான மூலையை அடைந்ததும் யாகத்தில் பூர்ணாகுதியும் ஆராதனையும் நடைபெறும்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாகனமும் ஒவ்வொருவகை அலங்காரமும் இடம்பெறும். தேர்த்திருவிழா மகோற்சவத்தின் உன்னதமான உற்சவமாகும்.

மகோற்சவத்தின் நிறைவாகிய தீர்த்தோற்சவம் மிகவும் முக்கியத்துவமுடையது. தீர்த்தோற்சவத்தையடுத்துச் சுவாமி வீதிவலம் வந்து ஆலயத்திற்குத் திரும்பியதும் யாக கும்பங்களை மூலமூர்த்திக்கு அபிஷேகித்தல் வேண்டும். இரவு கொடியிறக்கமும் சமஸ்த தேவதாவிசர்சனம், சந்தி விசர்சனம், சண்டேசுவர உற்சவம், ஆசார்ய உற்சவம் ஆகியன இடம்பெறும். மகோற்சவ காலத்தில் முதுல் நாளும் கடைசி நாளுமே கிரியைகள் நிறைந்துள்ளன. முதல்நாட் கிரியையின் மூலம் ஆக்கப்பட்டவையனைத்தும் கடைசி நாளில் நீக்கப்படுவது குறிப்பிடற்பாலது. முதல்நாட் கிரியை முறையாக விளங்கிக் கொண்டால் கடைசிநாட் கிரியையை விளங்கிக்கொள்வது எளிதாகும்.

உற்சவங்கள் தரும் பலன்களையும் நாம் அறிந்துகொள்வது இன்றியமையாததாகும். காமிகாகமம் பின்வரும் பயன்களைக் குறிப்பிடுகின்றது. ஒருநாள் உற்சவம் சிவப்பிரீதிக்காகவும், மூன்று நாள் உற்சவம் கிராமத்தின் பாதுகாப்பிற்காகவும், ஐந்து நாள் உற்சவம் உயிரினங்களின் பாதுகாப்புப் பொருட்டும் வாழ்வாங்கு வாழ்வதற்கும், ஏழுநாள் உற்சவம் உமைக்குப் பிரியத்தின் பொருட்டும், ஒன்பது நாள் உற்சவம் உலகப்பாதுகாப்பின் பொருட்டும், பதினொரு நாள் உற்சவம் புத்தியின் பொருட்டும், பன்னிரண்டு நாள் உற்சவம் தேவருக்கும் சகலருக்கும் பிரீதியின் பொருட்டும், பதின்மூன்றுநாள் உற்சவம் சாந்நித்தியத்தின் பொருட்டும், பதினைந்து நாள் உற்சவம் நல்வாழ்வுப் பொருட்டும், பதினேழுநாள் உற்சவம் மக்களது நல்வாழ்வுப் பொருட்டும், பத்தொன்பது நாள் உற்சவம் முத்தியின் பொருட்டும், இருபத்தொரு நாள் உற்சவம் முத்தியின் பொருட்டும், இருபத்தொருநாள் உற்சவம் அனைத்துத் தேவர்களது பிரியத்தைச் சேர்த்தற் பொருட்டுமாகும்.

உற்சவ காலத்தில் சிருட்டியாவது ஆன்மாக்களுக்குச் சிவஞானத்தை உணர்த்துதல். ஸ்திதியாவது உணர்ந்த சிவஞானத்தில் அழுந்தச் செய்தல், சங்காரமாவது பாசத்திலிருந்து பிரித்தல், திரோபாவமானவது சிவஞானத்தை அறியுஞ் சமயத்தில் முன்பிரிக்கப்பட்ட பாசஞானத்திற்செல்லவொட்டாது மறைத்தல், அனுக்கிரகமாவது சிவஞானத்தை அநுபவிக்கச் செய்தலாகும். உற்சவ காலத்தில் செய்யப்படும் ஒவ்வொரு கிரியையும் படைத்தல் ஆகிய சிருஷ்டி முதலிய ஒவ்வொரு தொழிலையும் குறிப்பதால் அக்கிரியைகள் ஒவ்வொன்றும் ஆன்மாக்களது மலத்தை நீக்கி வீடுபேறு அருளுதற்காக நிகழ்த்தப்படுவது என்பது உணரற்பாலது.

உற்சவ காலத்தில் சிருட்டியாவது ஆன்மாக்களுக்குச் சிவஞானத்தை உணர்த்துதல். ஸ்திதியாவது உணர்ந்த சிவஞானத்தில் அழுந்தச் செய்தல், சங்காரமாவது பாசத்திலிருந்து பிரித்தல், திரோபாவமாவது சிவஞானத்தை அறியுஞ் சமயத்தில் முன்பிரிக்கப்பட்ட பாசஞானத்திற் செல்லவொட்டாது மறைத்தல், அனுக்கிரகமாவது சிவஞானத்தை அநுபவிக்கச் செய்தலாகும். உற்சவ காலத்தில் செய்யப்படும் ஒவ்வொரு கிரியையும் படைத்தல் ஆகிய சிருஷ்டி முதலிய ஒவ்வொரு தொழிலையும் குறிப்பதால் அக்கிரியைகள் ஒவ்வொன்றும் ஆன்மாக்களது மலத்தை நீக்கி வீடு பேறு அருளுதற்காக நிகழ்தப்படுவது என்பது உணரற்பாலது.

தேர்த் திருவிழாவாகிய இரதோற்சவம் மகோற்சவத்தின் உச்சநிலையைக் குறிப்பது. இவ்விழா திரிபுர சங்காரத்து உண்மைக் காட்சியை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் கெடுத்தற்காக நிகழ்த்தப்படுவதாகும். "ஊர்கூடித் தேர் இழுத்தல்" என்ற வாக்கிற்கமைய அனைவரும் தேரின் வடந்தொட்டு நற்பலன் பெறுவர். இதனால் தேர்த் திருவிழா மக்களுக்குரிய புனித விழாவாகத் திகழ்கின்றது.

சிறந்த சிற்ப. வேலைப்பாளுகளுடன் கூடிய சித்திரத் தேரில் இறைவன் அடியார் புடைசூழ ஆடி அசைந்து வருவதைக் காண்பதே ஒரு தனியழகு. ஆலயப் பண்பாட்டில் தேர்த்திருவிழா பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டு விளங்குகின்றது.

இந்நாளில் ஆலயச் சூழலும் கிராமமும் புதுப்பொலிவு பெறுகின்றன. மக்கள் அகப்புற நிலைகளில் தம்மைத் தூய்மையாக்கிக் கொள்கின்றனர். மக்கள் அனைவரும் இறையடியார்கள் என்ற ஒரே நிலையில் தேரில் வடந்தொட்டு இழுத்து மனநிறைவு பெறுகின்றனர். ஆலயங்களில் கொடியேற்றம், தேர், தீர்த்தம் முக்கியத்துவம் பெறுவதால் இந்நாட்களில் மக்கள் பெரும் எண்ணிக்கைகளில் ஆலயத்தில் ஒன்று திரள்வர். மக்கள் ஆயிரக்கணக்கில் வந்து இறைவனை நேரில் தரிசித்து நலம் பெறுகின்றார்கள். அன்னதானம், மகேசுவர பூசை ஆகிய அறங்களைச் செய்யும் காலமாகவும் அது விளங்குகின்றது. சமூகப் பொருளாதார நிலையில் ஆலயச் சூழலில் மக்கள் தமக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்யத்தக்கதாக வணிகர்களது வணிகச் செயற்பாடுகள் துணைசெய்கின்றன. பல்வகைப் பண்டங்களை விற்றுப் பொருள் ஈட்டவும் இவ்விழா வணிகர்களுக்கு வாய்ப்பளிக்கின்றது. அனைவரும் நீராடிப் புத்தாடை புனைந்து, இறையருள் பெற்று நலம்பெறும் நாளாகவும் இது அமைகின்றது. இவ்வகையில் நால்வகைப் புருஷார்த்தங்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை வளர்க்கும் பெருவிழாவாக அமைவது தேர்த்திருவிழா.

தேரோட்டமும் தீர்த்தமும் மக்களது உடலையும் சிந்தனையையும் தூய்மைப்படுத்துகின்றன. மக்கள் எத்தகைய வேறுபாடுமின்றி பால், இனம், பிராயம், செல்வநிலை, வறியநிலை ஆகியவற்றை மறந்து இறைவனது சந்நிதியில் ஒன்றுபடுகின்றனர். மக்கள் அனைவரும் சமநிலையில் நின்று இந்தத் தரிசனம் பெறும் பாக்கியத்தை நல்குவது தேர்த்திருவிழாவாகும். வேற்றுமைகள் மறைந்து ஆண்டவனது சிந்தனையில் தம்மை ஈடுபடுத்தும் ஒரு புண்ணியநாள் இந்நாள் எனில் மிகையில்லை. தேர்த்திருவிழாவில் பக்தர்கள் ஆன்ம சுத்தியோடு வழிபாட்டில் தம்மை இணைத்துக்கொள்வர். ஆலய வீதியில் தேர் ஓடினால் எம்மைப் பீடித்த ஆணவமும் ஓடிமறையும். ஆலயப் பண்பாட்டிலே தேர்த்திருவிழா நிலையான, பண்பட்ட, மேலான குறிக்கோளையுடைய ஓர் உன்னத இடத்தைப் பெற்றிருக்கின்றது. நமது வாழ்வியலைச் செம்மைப்படுத்தத் தேர்ந்தெடுக்கும் ஒரு நல்ல நாளாகத் தேர்த்திருவிழா நாள் அமைந்துவிடுகின்றது. தேரின் நான்கு சக்கரங்களையும் தேர்த் தட்டினையும் மேலே அழகுற அமைந்து விளங்கும் விதான அடுக்குகளையும் பார்த்தால் உயிர் இறைவனை அடையச் செய்யும் நெறியின் அமைப்பையும் சுட்டி நிற்பது உணரற்பாலது. தேரும் தேர் ஓட்டமும் அதில் பக்தர்கள் வடந்தொட்டுக் காட்டும் பக்தியும் இறைவனோடு உயிர் இரண்டறக் கலக்கும் பேரின்ப வாழ்வுக்குரிய சாதனையைக் காட்டி நிற்கின்றன. நான்கு சக்கரங்களும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு வழிகளையும் குறிப்பதாக உள்ளன. அவை அசைந்தால் தேர் அசைவது போன்று எமது வாழ்வு ஆன்மீக நெறியில் அசைய இந்நான்கு வழிகளும் சக்கரம் போன்று உதவுகின்றன. திருவருள் நலன்பெற்று உய்வுபெற அவை எமக்கு அறிவுறுத்துகின்றன. அசைக்கமுடியாத தேரை அன்பர்கள் ஒன்றுகூடி இருப்பிலிருந்து அசைத்துத் தேர் வீதியில் வலம் வந்து மறுபடியும் இருப்புக்குக் கொண்டுவந்து சேர்க்கும் முயற்சி ஆத்மீக சாதனையைக் குறிக்கின்றது. தேர்த்திருவிழாவில் மெய்வருந்தக் கிடைக்கும் கூலி அளப்பரியது. தேரானது சரியான வழியில் செல்லச் சறுக்குக் கட்டை உதவுவது போல் எமது வாழ்வியற் சக்கரங்களும் இறைவழியில் செல்லவேண்டும் என்ற தத்துவம் உணர்த்தப்படுகின்றது. தேர்த்திருவிழாவில் அர்ச்சனை செய்தல், தேங்காய் உடைத்தல், பச்சை சாத்துதல் ஆகிய அனைத்தும் சிறந்த தத்துவார்த்தப் பொருள் கொண்டவை.

தேர்த்திருவிழாவில் தேங்காய்களைச் சிதறடித்துத் தத்தம் பக்தியை அடியார்கள் வெளிப்படுத்துவர். தேங்காயின் உள்ளிருக்கும் இளநீர் புனிதமான அருள் வெள்ளத்தைக் குறிப்பது. ஆன்மா தேங்காயின் பருப்பு. ஆன்மாவை உலக ஆசாபாசங்கள் சுற்றியிருப்பது போன்று தேங்காயை மட்டை, தும்பு போன்றன சுற்றியுள்ளன. ஆன்மாவை ஆணவம் இறுகப் பற்றியிருப்பது போன்று சிரட்டை மிகக் கடினமாகத் தேங்காயைப் பற்றிக் கொண்டுள்ளது. நாம் செய்த பாவ வினைகள் தேங்காய் போன்று திரண்டுள்ளன. அதனைச் சிதற

உடைக்கும்போது எம் பாவங்கள் அனைத்தும் இறை சந்நிதியில் சிதறிப்போகும் தத்துவத்தையே தேங்காயை உடைக்கும் செயற்பாடு காட்டி நிற்கின்றது. தேர்த்திருவிழாவில் இவ்வுண்மையை உணர்ந்து நாம் நம்பிக்கையுடன் உய்வு பெறக்கூடிய மனப்பக்குவத்தை வளர்க்க இவ்விழா உதவுகின்றது.

தேர்த் திருவிழா நாளில் ஆலய சேவையில் ஈடுபடுவது உன்னத பலனைத் தரும். தீட்சை பெற்றுத் திருத்தொண்டு செய்வது உத்தம பலனைத் தரும். திருவிழாக் காலத்தில் வலம் வருவோர் ஒவ்வோரடிக்கு ஒவ்வோர் அசுவுமேதயாகப் பலனைப் பெறுவர் என்பது குறிப்பிடற்பாலது. துவஜாரோஹன காலத்தில் துவஜ படத்தின் பின் வலம்வருவோர் பொன், மகவு, பௌத்திரர் முதலிய ஐசுவரியங்களைப் பெறுவர். திருவிழாவில் நாள் தோறும் பிரதக்ஷிணம் வருவோர் உருத்திரராவ என்று சிவபுண்ணியத் தெளிவில் தெளிவுபடுத்தப்படுகின்றது. காலையில் பிரதக்ஷிணம் செய்தலால் வியாதி நாசமடையும். மதியத்தில் பிரதக்ஷிணம் செய்தலால் விரும்பிய சித்திகிட்டும். சாயங்காலத்தில் பிரதக்ஷிணம் செய்தலால் சர்வ பாவநீக்கம் பலனாகக்கிட்டும் எனச் சகலாகம சங்கிரகம் கூறும் அங்கப் பிரதக்ஷிணத்தால் தீவினை நீங்கி முத்தியின்பம் கிட்டுமென்று அருணகிரி புராணம் கூறும்.

மகோற்சவ மகத்துவம் பற்றி அச்சுவேலி ச. குமாரசுவாமிக் குருக்கள் மிக விரிவாக "மகோற்சவ விளக்கம்" என்ற நூலில் நன்கு விளக்கியுள்ளார். இவ்வாறாக ஆலய வழிபாட்டில் மகோற்சவம் உன்னத இடம்பெறும் காரணம் பற்றியும், அதன் முக்கியத்துவம் பற்றியும் அனைவரும் அறிந்து கொள்வதற்காக வருடந்தோறும் வெளிவரும் பஞ்சாங்கத்தில் ஆலய மகோற்சவம் பற்றியும், கொடியேற்றம், தேர், தீர்த்தம் பற்றியும் கால விபரங்கள் இடம்பெறுகின்றன. மக்களை இவ் விழாக்களில் ஆற்றுப்படுத்த இந்த விபரங்கள் துணை செய்கின்றன.

இவ்வகையில் ஆலயப் பண்பாட்டில் மகோற்சவம் மிக உன்னத இடத்தைப் பெற்று மக்களது பக்தியையும், இறை நம்பிக்கையையும் காலந்தோறும் உணர்த்தி வருகின்றன. பிரமோற்சவமாகிய தேர்த் திருவிழாவின் உள்ளார்ந்த பொருளை அறிந்து அவ்விழாவில் திரிகரண சுத்தியுடன் பங்குகொண்டு எமது இம்மைசார் வாழ்வியலைப் புனிதப்படுத்திக்கொண்டு இறையருளுக்குப்பாத்திரராவோமாக.

**நன்றி : யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ ராசராசேஸ்வரி (பேய்ச்சி) அம்பாள் ஆலய சித்திரத்தேர் மலர்**




தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தீர்த்தத்திற்கு எழுந்தருளல்





ஓம் அலங்காரத்தில்
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி



தெல்லிப்பழை
ஸ்ரீ துர்க்காதேவி சப்பறம்



நல்லூர் கந்தன் கொடியேற்றம்



நல்லூர் கந்தன் தேர் திருவீதியுலா




நல்லூர் கந்தன் கார்த்திகைத் திருவிழா



பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலய முன்புறத் தோற்றம்



பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய மகோற்சவம்



சந்நிதி ஆலய முன்புறத்தோற்றம்



சந்நிதி ஆலய தேர் வீதிவலம் வருதல்



சந்நிதி வேலவர்



சந்நிதி பழைய தேர்

# ஆவணிச் சதுர்த்தி

பிரம்மஸ்ரீ சோ. குஹானந்தசர்மா

பிள்ளையார் விரதங்களுள் ஆவணிச் சதுர்த்தியும் ஒன்றாகும். ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தித் திதியும், விசாக நட்சத்திரமும, சிம்ம லக்கினமும், சோம வாரமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் எல்லாம்வல்ல விநாயகப் பெருமான் பாலச்சந்திர மூர்த்தியாக அவதரித்தார். இதனால் விநாயகர் அடியார்கள் ஆவணிச் சதுர்த்தியன்று விரத அனுஷ்டானங் களுடன் பிள்ளையாரை வழிபட்டு வருகின்றனர்.

வி + நாயகர் என்றால் தனக்கு மேல் ஒரு தலைவரும் இல்லாத ஏக நாயகன் என்பது பொருள். விநாயகப் பெருமானின் திருமேனி ஞான வடிவினதாகும். எனவே, இவர் ஞான விநாயகர் ஆகின்றார். சகல சித்திகளையும் நல்குவதால் சித்திவிநாயகர் எனப்படுகின்றார்.

பிள்ளையார் வழிபாடு இப்பொழுது உலகெங்குமே உள்ளது. இதற்கான காரணம் அவரது பேரருளேயாம். பிள்ளையார் வழிபாட்டில் ஆவணிச் சதுர்த்தி பக்தர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமானதாகும். ஆவணிச் சதுர்த்தி வழிபாடு அன்புடனும், பக்தியுடனும், பற்றுடனும் அடியார்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சதுர்த்தி விரதமிருப்போர் ஆவணிச் சதுர்த்தியன்று சங்கற்பித்து விரதத்தை ஆரம்பிக்க வேண்டும். ஆவணிச் சதுர்த்தியன்று காலையில் விரதகாரர் தலையில் தோயவேண்டும். பின்பு உலர்ந்த ஆடை அணிந்து சைவ அனுஷ்டானங்களை மேற்கொள்ள வேண்டும். அதன் பின்னர் அவரவர் வசதிகளுக்கமைய வீட்டிலே பிள்ளையார் வழிபாட்டினை மேற்கொள்ளலாம். கோவிலுக்குச் சென்று அபிஷேகம், பூஜை உற்சவம் என்பனவற்றைக் கண்டு வணங்கலாம். அர்ச்சனை வழிபாடுகளைச் செய்தல் நல்லது. நட்சத்திரம், பெயர் என்பன சொல்லி அர்ச்சனை செய்வதே மேலானது.

பிள்ளையாருக்கே பிடித்தமான அறுகு, எருக்கு மாலைகளைச் சாத்தலாம். அறுகு, எருக்கு, கொன்றை, தும்பை, வன்னி என்பவற்றால் அர்ச்சிப்பது உத்தமமானது. பாலும், நல்ல தேனும், எள்ளுப்பாகும், மோதகம், அப்பம், அவல், பொரி, இராசவள்ளிக்கிழங்கு, வள்ளிக்கிழங்கு, கரும்பு, மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம், விழாம்பழம் என்பனவும் சதுர்த்தித் திதியும் நைவேதிக்கப்படுபவையாகும். சதுர்த்தி விரதம் இருப்போர் சகல சித்திகளையும் பெற்றுச் சௌபாக்கிய வாழ்வு வாழ்கின்றனர். சதுர்த்தித் தினத்தில் பிள்ளையாருக்கே பிடித்தமான "விநாயகர் அகவலைப்" பாராயணஞ் செய்தல்

நற்பலனைக் கொடுக்கும். "பிடியதனுருவுமை" போன்ற பிள்ளையார் சம்பந்தமான தேவாரம், புராணம் என்பவற்றையும் பாராயணஞ் செய்தல் மிக்க நல்லது. புராணங்கள் "பிரணவப் பொருளாம்" ஐங்கரன் எனப் பிள்ளையாரைப் போற்றுகின்றன. அவர் யானைமுகங் கொண்டவர் மூன்று கண்களையும், இரு பெருஞ் செவிகளையும், ஐந்து கரங்களையும், பெரு வயிற்றையும், இரு குறுகிய திருவடிகளையும் கொண்டு விளங்குபவரே விநாயகப் பெருமான்.

யானைமுகத் தோற்றம் பிள்ளையார் சகலருக்கும் உணர்த்தும் பிரணவத் தத்துவமாகும். ஓம் என்ற உயர்ந்த தத்துவம் பிள்ளையாருக்கே உரியதாகும். பிள்ளையாரின் ஐந்து கரங்களும் அவர் தாமே செய்யும் ஐந்து தொழிலைக் குறிப்பனவாகும். சூரிய, சந்திர, அக்கினி என்பனவற்றைப் பிள்ளையாரின் மூன்று கண்களும், காட்டுகின்றன. ஆன்மாக்களின் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலவாதத் தன்மைகளைப் பிள்ளையாரின் இரு செவிகளும் காத்தருளுகின்றன. பெரு வயிறானது உலகம் முழுவதையுமே அடக்குவதாக உள்ளது. பெருந் தோற்றமும் பொலிவும் கொண்டு வேண்டுவார் வேண்டுவதை அருள்பாலித்தருளும் விநாயகனைச் சதாகாலமும் நாம் வழிபடவேண்டும். விசேஷமாக ஆவணிச் சதுர்த்தி முதல் சதுர்த்தி நாட்களில் விரத அனுட்டானங்கள் மேற்கொண்டால் இஷ்டசித்திகளைப் பெற்று நல்வாழ்வு வாழலாம்.

ஆவணிச் சதுர்த்தி தினத்தில் எல்லா ஆலயங்களிலும் அபிஷேகங்கள் உள. பல ஆலயங்களில் 108 அல்லது 1008 சங்காபிஷேகங்கள் நடைபெறுகின்றன. மஹோற்சவம், உற்சவம் என்பனவும் இடம்பெறுவது வழக்கம்.

ஊர் நன்மைக்காக கணபதி ஹோமம், லட்சார்ச்சனை செய்யும் ஆலயங்களும் உள்ளன. ஆவணிச் சதுர்த்தி என்றதும் அன்பு, பாசம் கொண்டு தொண்டுகள் புரியும் பக்தர்களை எங்கும் காணமுடியும். "எங்கள் பிள்ளையார்" என்ற இறுக்கமான பிடிப்பு எல்லோர் மனதிலும் சந்தோஷத்துடன் இருப்பதையும் நாம் காணலாம். இவற்றிற்கான காரணம் பெருமை வாய்ந்த பிள்ளையார் அருள்மிக்கவர். அடியார் இடரினைப் போக்கி அவர்களைச் சந்தோஷப்படுத்துபவர்.

இதனால் விசேஷமாக ஆவணிச் சதுர்த்தியன்று எல்லோரும் விரதம் இருக்கின்றனர். மாதச்சதுர்த்தி நாட்களிலும் விரத அனுட்டானங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

பிள்ளையார் பேரருள் எல்லோருக்கும் கிட்டுவதாக!

# பொன்னாலை வரதராஜப்பெருமான் கோவில் வரலாறு

**புராண வரலாறு :**

இலங்கையிலுள்ள கதிர்காமம் - கேதீஸ்வரம் - கோணேஸ்வரம் - நகுலேஸ்வரம் முதலிய 20க்கு மேற்பட்ட தலங்களின் தோற்றத்தையும் வரலாற்றையும் கூறும் தக்ஷிண கைலாச புராணத்தில் "பொன்னாலயப் பெருமை உரைத்த படலம்" என்னும் அத்தியாயத்தில் இவ்வாலயத் தோற்றம்பற்றிக் கூறப்பட்டுள்ளது.

துர்வாச முனிவரின் சாபத்தால் வலைஞனாகப் பிறந்த இந்திரன் ஆமையான திருமாலைத் தீண்டிய மாத்திரத்தே சாபவிமோசனம் எய்தினான் என்றும் இந்திரனுக்கு அருள்புரிந்த திருமாலுக்கு அவ்விடத்தில் ஆலயம் அமைத்து வழிபட்டவர்கள் ஸ்ரீமந் நாராயணனிடம் வேண்டிய வரங்களைப் பெற்ற மகிழ்ச்சியினால் திருமாலை வரதராஜன் என்று அழைத்து வணங்கினார் என்பதும் இத்தலத்திற்கு ஆவணி ரோகிணியும் அட்டமியும் சேர்ந்து வரும் தினம் வெகு விசேடம் என்பதும் தக்ஷிண கைலாச புராணத்தில் காணக்கிடக்கும் செய்திகளாம்.

இப்புராணத்தில், பொன்னாலயம் என்னும் பெயர் உண்டாவதற்குக் கூறப்படும் காரணம் இனிமையானது. ஆமையைக் கரைசேர்த்தவுடன் ஆகாயத்தில் பொன் விமானம் தோன்றியதாலும், ஆமை பொன்னாமையாகக் காட்சியளித்தமையாலும், பொன் என்னும் பெயரையுடைய இலக்குமி இவ்வாலயத்தில் திருமாலை வழிபட்டு அருள் பெற்றபடியாலும் இவ்வாலயத்திற்குப் பொன்னாலயம் எனப் பெயருண்டாயதாம்.

**அரச திருப்பணி :**

கோணேசர் ஆலயத்தில் கி.பி.5ஆம்நூற்றாண்டில் திருப்பணி செய்த சோழ அரசனாகிய குளக்கோட்டன் என்பான் இவ்வாலயத்தில் பல திருப்பணிகள் செய்திருக்கின்றான். ஏழு வீதிகள், கேணி முதலியவற்றைக் குளக்கோட்டன் அமைத்ததோடு அமையாமல் கோணேஸ்வரத்தில் நாளாந்த வழிபாடுகளும், வருடாந்த திருவிழாக்களும் நியமித்ததுபோல இவ்வால யத்திலும் நிகழ்த்தவேண்டிய காரியங்களைச் செய்வதற்கு உரியவர்களையும் நியமித்திருந்தான் என்பதற்கும் பல சான்றுகள் காணப்படுகின்றன.

குளக்கோட்டன் செய்த பணிகள் 15ஆம் நூற்றாண்டுவரை நிலைத்திருந்தன என்பது மட்டுமன்றி ஆலயத்தின் வளர்ச்சியும், கீர்த்தியும்கூட மிக்கிருந்தன என்பதற்கு, சிங்கள மொழியில் உள்ள "கோகில சந்தேசம்" என்னும் நூலில் வரும் பொன்னாலை வரதராஜப்பெருமான் வர்ணனை பிரபல சாட்சியாக உள்ளது.

**ஆலய வீழ்ச்சியும் எழுச்சியும் :**

இலங்கையை ஆண்ட அன்னிய மதத்தினரான டச்சுக்காரர் 16ஆம் நூற்றாண்டில் இலங்கையில் உள்ள இந்து ஆலயங்களை அழித்தபோது இவ்வாலயத்தையும் அழித்தார்கள். இவ்வாலயக் கற்களைக் கொண்டு டச்சுக்காரர் தமக்குத் தேவையான பல கட்டடங்களை ஊர்காவற்றுறை, சங்கானை முதலிய இடங்களில் அமைத்திருந்தனர்.

ஆனால் ஆங்கிலேயர் ஆட்சியில் யாழ்ப்பாணத்தில் சைவ ஆலயங்கள் தலைநிமிர்ந்தபோது இவ்வாலயமும் விரைந்து தோன்றிவிட்டது எனலாம். கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், மாந்தை திருக்கேதீஸ்வர ஆலயம் என்பன வற்றைத் தோற்றுவிப்பதற்கு வழிகோலிய ஆறுமுக நாவலர் காலத்திலே பொன்னாலை வரதராஜப் பெருமான் கோவிலில் திருவிழாக்கள் வெகு சிறப்பாக நடைபெற்றன. இவ்வுண்மையை நல்லூர்க் கந்தசுவாமி கோவில் சீர்திருத்தம் பற்றி நாவலர் தாமே எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

**தற்கால நிலை :**

நாவலர் காலத்தில் விரைவாக எழுச்சி பெற்றிருந்த இவ்வாலயத் திருப்பணி வேலைகளுக்காகப் பாலஸ்தாபனம் செய்யப்பட்ட நிலையில் சில வருடங்கள் திருவிழா ஒன்றும் நடைபெறாது ஒடுங்கிய தன்மை சுமார் 75 வருடங்களுக்கு முன் ஏற்பட்டிருந்தது. இதனால் பிரபலிக்கம் மங்கிய ஆலயத்தில் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன்னருமாக 2 கும்பாபிஷேகங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இப்போது ஆலயம் திருப்திகரமாக வளர்ச்சியடைந்து வருவதன் பிரதிபலிப்பாகவே புதுத் தேர்த் திருப்பணியும் நடைபெற்றுள்ளது.

எங்கள் சமூக அமைப்பில் பொது நிறுவனங்களை நிர்வகிப்பதற்கு முக்கியத்துவமும் நாணயமும் மிக்க பெரிய மனிதர்களிடம் ஆலய நிர்வாகம் ஒப்படைக்கப்படுதல் பண்டைய வழக்கமாகும். இதற்கமைய இவ்வாலயமும் நிர்வாகத்தின் பொருட்டு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அழகக்கோன் என்பவர் கி.பி. 1600ஆம் ஆண்டளவில் தனது பெயருக்கு இவ் ஆலய உரிமைக்குத் தோம்பு முடித்திருந்தார். அழகக்கோனின் பரம்பரையினர் கோவில் காரியங்களைக் கவனித்து வந்ததின் விளைவாக 1883இல் தங்கள் பெயருக்கு உறுதியும் பதிந்து கொண்டார்கள். ஆனால் அன்றிலிருந்து இன்றுவரை ஜனநாயக முறைக்கு அமைய, தர்மகர்த்தா – பூசகர் - ஊரவர்களின் கூட்டுறவுடனான செயல் திட்டத்திலேயே ஆலய கருமங்கள் கவனிக்கப்பட்டும் நிறைவேற்றப்பட்டும் வருகின்றன.

# நல்லூர் கந்தசுவாமி கோவில்

சைவ உலகில் "கோயில்" என்றால் சிறப்பாகக் கருதப்படுவது "சிதம்பரம்" என்னுந் திருத்தலமேயாம். அதேபோன்று இன்று ஈழத்தில் கோயில் என்றால் சிறப்பாகக் கருதத்தக்கது நல்லூர்க் கந்தசுவாமி கோயிலேயாம்.

நல்லூர் யாழ்ப்பாணப் பட்டனத்திலுள்ள ஓர் ஊர். ஆரியச்சக்கர வர்த்திகள் என்று கூறப்படும் யாழ்ப்பாணத் தமிழ் அரசரின் அரசிருக்கை யாகப் பன்னெடுங்காலம் பேர் புகழுடன் விளங்கிய ஊர்; ஆரியச்சக்கர வர்த்திகள் சைவசமயிகள்; இவர்களது அமைச்சர்களும், குடிமக்களும் சைவசமயிகளாகவே இருந்தனர். இதனால் இம்மன்னர்கள் தங்களதும், தங்கள் மக்களதும் சமயக் கடமைகளை நிறைவேற்றுதற்காகத் தங்கள் அரணைச் சுற்றியும், சுற்றுப்புற ஊர்களிலும் பல சிவாலயங்களைக் கட்டுவாராயினர். வெயிலுகந்த பிள்ளையார் கோயில், கைலாயநாதர் கோயில், சட்டநாதர் கோயில், வீரமாகாளியம்மன் கோயில், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் போன்றவை இவர்கள் கட்டிய கோயில்களுட் சிலவாகும். இவ்வாறு இவர்களினால் அமைக்கப்பட்ட ஆலயங்களில் பரிவார தேவகோட்டங்களும், சிறந்த யாக மண்டபங்களும், களஞ்சியம், மடைப்பள்ளி, திருக்குளம் முதலியனவும் சித்திரக் கோபுரங்களோடு மதில்களும், நந்தவனம், அக்கிரகாரம், வேதாத்தியான மண்டபம், அன்னதான சத்திரங்கள், தேரும் தேரோடும் வீதிகளும் அமைந்திருந்தனவாம். இவற்றோடு நான் மருங்கும் தாமரைத் தடாகங்களும், அவைகளைச் சுற்றிச் சிறந்த படித்துறைகளும், அவைகளுக்கு அருகே தோரண மண்டப மேடைகளும், இடையிடையே சிறந்த மரக்காக்களும் அமைப்பித்துத் தேவநகராக நல்லூரை எழில்பெற இவர்கள் அக்காலத்தில் வைத்திருந்தனர். இப்படியாக மன்னர்களினால் எடுக்கப்பட்ட மனம் நிறைந்த அருள் அலை வீசும் சிவாலயங்கள் நிறைந்த கோட்டமாகிய நல்லூருக்கு இன்று அணியாக விளங்குவது அங்குள்ள கந்தவேள் கோயிலாகும்.

தமிழுக்கும் சைவத்திற்கும் அருந்தொண்டுகள் ஆற்றிய யாழ்ப்பாணத்தரசர்களது நேரடிப் பரிபாலனத்தில் இருந்துவந்ததும், அவர்களது முக்கிய வணக்கத்தலங்களுள் ஒன்றாகவிருந்ததும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலாகும். இக்கோயில் ஆரியச் சக்கரவர்த்தியின் முதலமைச்சராக விளங்கிய புவனேகவாகு என்பவனால் கட்டப்பட்டதென்பர். ஒரு சாரார்; இன்னொரு சாரார், யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றிய

செண்பகப்பெருமாள் என்னும் புவனேகபாகுவினால் 1454இல் கட்டப்பட்டதென்பர். எது எப்படியாயினும், புவனேகபாகு என்பவனது பெயர் மகோற்சவங்களில் ஆலயக் கட்டியத்தில் கூறப்பட்டுவரும் வழக்கம் இன்று இவ்வாலயத்தில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

பண்டை நல்லூரில் 64 வீதிகள் இருந்தன. அவை ஒவ்வொன்றிலும் கந்தவேள் கோவிலுக்கு நியமனப்படி தொழும்பு செய்பவர்கள் வாழ்ந்து வந்தனர். பல தலைமுறைகளும், பல அரச முறைகளும் உருண்டோடி விட்டன. ஆயினும், இக்கோயிற் தொழும்பு முறையால் ஏற்பட்ட இவ்வாலய அயல் இடங்களினது பெயர்கள் இன்றுவரையும் மாற்றமடையாது நின்று நிலவி வருகின்றன. அவ்விடங்களில் வாழும் மக்கள் தலைமுறை தலைமுறையாகத் தொன்று தொட்டுச் செய்துவரும் தொழும்புகளை மறவாது உரிமையொடு செய்துவருகின்றனர். இவை இவ்வாலயத்தின் பண்டைப் பெருமையை நினைவுகூர வைத்து, இப்பெருமான் மீது இம் மக்களுக்கு இருந்துவரும் பக்தியையும் எடுத்துக்காட்டுகின்றன.

1478இல் அரச கட்டிலேறிய சிங்கை பரராசசேகரன் இவ்வாலயத்திற் கண்மையில் பகரவடிவிலான திருமஞ்சனக் கேணி ஒன்றை அமைப்பித்தான். புண்ணியநதியான யமுனையிலிருந்து தீர்த்தம் தருவித்து இவ்வேரியில் சொரிவித்தான். அதனால் அவ்வேரியை "யமுனையேரி" என்றழைப்பா ராயினர். "யமுனாரி" என இன்று அழைக்கப்படுவதும் இவ்வேரியேயாம்.

400 ஆண்டுகள் வரை சைவத் தமிழரசர்களால் ஆளப்பட்டுவந்த யாழ்ப்பாணவரசு 2-2-1621இல் அந்நியரான போர்த்துக்கேயரின் கைப்பட்டது. யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியுடன் சைவ ஆலயங்கள் பல போர்த்துக்கேய ரினால் இடித்தழித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அப்படியாக அழிக்கப்பட்ட சைவக்கோயில்களுள் மகோன்னத நிலையிலிருந்த நல்லூர் கந்தசுவாமி கோவிலும் ஒன்றாகும். இதனை அழித்தவன் "ஒலிபறா" என்னும் பறங்கித் தளபதியாம். கோவிலை அழித்துச் சூறையாடியதோடு நிற்காது, அஃது இருந்த இடமும் தெரியாதபடி அத்திவாரத்தையுமே கிளறியெடுத்துவிட்டதாம் பறங்கிப்படை, போர்த்துக்கேயரிடமிருந்து 21-6-1658இல் யாழ்ப்பாண்வரசு ஒல்லாந்தர் கைக்கு மாறியது. அப்போது அவர்கள் தங்கள் மத வணக்கத்திற்குரிய தேவாலயம் ஒன்றைப் பழைய கந்தசுவாமி கோவில் இருந்த இடத்தில் கட்டிக்கொண்டனர். பழைய நல்லூர் கந்தப்பெருமான் கோவில் இருந்த யமுனா ஏரிக்குப் பக்கத்தில் இன்று இருப்பது ஒல்லாந்தர் காலத் திருச்சபைத் தேவாலயமாகும்.

இப்படியாகப் புறத்தோற்றத்தில் இருந்த நல்லூர்க் கோவிலை அந்நியரால் அழிக்கமுடிந்ததே தவிர, அவனடியாரது அகக்கோயில் வழிபாட்டை அவர்களால் அழிக்கவோ, அகற்றவோ, அசைக்கவோ முடியவில்லை. எனினும் மனத்தகத்தவனாகிய முருகப்பெருமானுக்குப் பழைய கோவிலுக்கு அண்மையில், 1734இல் புதிய ஒரு சிறு மடாலயம் அமைத்தனர். ஆரம்பத்தில் இம்மடாலயம் கந்தபுராணம் படிக்கும் இடமாகவே பெரிதும் பயன்பட்டு வந்தது. இம்மடாலயத்தில் வேல் ஒன்றையே வைத்து வழிபட்டும் வந்தனர். மடாலயமாக இது இருந்ததினாற்றான் தூபி எதுவும் இல்லாது இருந்துவந்தது. அக்கால ஒல்லாந்தர் ஆட்சியில் சிறாப்பராக இருந்த இரகுநாதமாப்பாண முதியார் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, இம்மடாலயத்தைக் கற்களாலும், செங்கற்களாலும் கட்டுவித்து ஓட்டால் வேயப்பட்ட கோயில் ஆக்கினார். அவர் பரம்பரையில் வந்தோரே அன்று தொடக்கம் இன்றுவரை இருந்துவருகின்றனர்.

இக்கோயிலைக் கருங்கற்களாற் கட்டவேண்டும் எனவும், மூலத்தானத்தில் வேலுக்குப் பதிலாகத் தேவப்பிரதிட்டை செய்யப்பட வேண்டுமெனவும் கூறி வந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் ஆவார். இதற்காக அவர் மூவாயிரம் ரூபாவரை பணமும் திரட்டிக்கொடுத்ததாக வரலாறு கூறுகின்றது. ஆயின் அவர் காலத்தில் இவை நிறைவேறவில்லை.

மூலத்தானத் தளவேலைகள் கருங்கற்றிருப்பணியாக 1902இல் நிறைவேறி ஆலயப் பிரதிட்டை செய்யப்பட்டுக் குடமுழுக்கு நடைபெற்றது. 1909இல் சுற்றுப்பிரகார மண்டபங்கள் கட்டப்பட்டன. ஆயின் இவற்றுக்கு முன்னதாக 1899இல் மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்று கட்டப்பட்டிருக்கின்றது. இதற்குச் சான்று அதிலுள்ள செப்பேடாகும்.

இவ்வாலயம் குமாரதந்திர முறையில் பூசை நடைபெறும் தலமாகும். ஈழத்தில் இம்முறையில் பூசை நடைபெறும் தலம் இது ஒன்றேயாம். இன்று இவ்வாலயத்தில் நாள்தோறும் ஆறுகாலப் பூசைகள் நேரம் தப்பாது குறித்தபடி நடைபெற்றுவருகின்றன. மற்றும்சிறப்பு விழாக்களும் இதே ஒழுங்கிற்றான் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு மாதப் பிறப்பன்றும் திருவனந்தற் பூசைக்கு முன்னதாகப் பூந்தோட்டத் திருமஞ்சனக் கிணற்றில் தீர்த்தம் நடைபெறுவது இவ்வாலய வழக்கம். இங்கு மாதந்தோறும் கார்த்திகை உற்சவம் சிறப்பாக நடைபெறுவதுடன், சஷ்டி தோறும் செல்வ முத்துக்குமார சுவாமிக்குத் திருமஞ்சனமும் நடைபெறுகின்றது.

இவ்வாலய மகோற்சவம் இருபத்தைந்து நாட்கள் நடைபெறும். இவ்வாலயக் கொடியேற்றச்சீலையை ஆண்டுதோறும் நல்லூரில் வாழ்ந்துவரும் செங்குந்த மரபினரே அழகிய தேரில் வைத்துக் கொண்டுவந்து கொடுப்பர். ஆவணி மாத அமாவாசையன்று தீர்த்தமும், முதல்நாள் தேர்த்திருவிழாவும் நடைபெறும். இக்காலத்தில் செந்துவர் வாயார் சேவடி சிந்திக்கவரும் பக்தர்கள் கூட்டம் பல்லாயிரமாக இருக்கும். இக்காட்சி அப்பர் பெருமான் "முத்துவிதானம்" என்ற திரு ஆரூர்ப் பதிகத்தில் காட்டும் ஆதிரைநாட் காட்சியையும் சிறப்பையும் எண்ணச் செய்யும்.

தேர்த்திருவிழாவன்று மாலை தேர்முட்டியில் சண்முகப் பெருமானுக்குப் பச்சை சாத்தி நடைபெறும் அர்ச்சனையும், அப்பொலிவோடு பெருமான் ஆலயத்திற்குத் திரும்பும் கோலமும் நெஞ்சை நெகிழ்விப்பதாகும். பச்சை சாத்தி எழுந்தருளுவதன் நோக்கம் "எல்லாச் சீவராசிகளுக்கும் எல்லா அநுக்கிரகங்களையும் செய்யும் கருத்தாவாகிய சதாசிவமூர்த்தியாக உள்ளவர் தானே என்பதையும், வேண்டுவார் வேண்டுவதை ஈயும் தன்மையும் தனக்கே உடையதென்பதையும் காட்டி, எல்லா நலன்களையும் பெற்று வாழுங்கள் என்று அருள் செய்யும் குறிப்பை உணர்த்தும் கோலம் என்பதுதான்.

இங்கு ஒவ்வொரு மூர்த்திக்கும் விலையுயர்ந்த தங்க, வைர, இரத்தினங்களால் ஆகிய ஆபரணங்கள் உள. அதே போன்று வெள்ளி தங்க வாகனங்களும், சிங்காசனமும் உள.

கோயிலின் கிழக்கு வாயிலைச் சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த ஐந்தடுக்குக் கோபுரமும், அதன் இருமருங்குமுள்ள அழகிய மணிக்கூட்டுக் கோபுரங்களும் அணி செய்கின்றன. தெற்கு வீதியில் இன்னொரு கோபுரம் கோயிலை அழகு செய்கிறது. இதற்கு நேராகத் தெற்குப் புற வெளிவீதிக்குத் தெற்கே அழகிய தீர்த்தக்கேணியும், தண்டாயுதபாணி கோவிலும் இருக்கின்றன. இத்திருக்கேணியிற்றான் மகோற்சவகாலத் தீர்த்தம் நடைபெறுகிறது.

கோயிலைச் சுற்றிவரப் பல மடங்கள் இருக்கின்றன. அவற்றுள் தேர்முட்டிக்கு அண்மையில் உள்ள "அறுபத்து மூவர் குருபூசை மடம்" பிரபல்யமானது. இதுவே சடையம்மா மடம்எனப்படுவதாகும். இதன் காலம் 1892.

படமாடும் இக்கோயிற் குமரனிடம், நடமாடும் கோயில்களாக விளங்கிய யாழ்ப்பாணச் சித்தர் பரம்பரையில் வந்த செல்லப்பாச்சாமி,

யோகர்சாமி போன்ற ஞானவான்கள் வந்து தரிசனஞ் செய்துநடமாடி இருக்கின்றனர்.

இவ்வாலயம் இன்றிருக்கும் காணியின் பெயர் குருக்கள் வளவு, தோம்பு உறுதியின்படி கோயிற்காணிக்கு உரிமையுடையவர் அம்பலவாணர் கந்தப்பச் செட்டியார். (அம்பலவாணர் – சிவன் ; கந்தப்பச் செட்டியார் – சிவன் மகன் முருகன்.)

இவ்வாலயத்தின்மீது 45க்கு மேற்பட்டோர் பாமாலை பாடியுள்ளனர்.

மூலம் – ஈழத்தில் சைவம்
கொழும்பு விவேகானந்தசபை வெளியீடு.

# நல்லூரரான் திருவடி...

நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி – கிளியே!
இரவு பகல் காணேனெடி.

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி – கிளியே!
நல்லூரான் தஞ்சமெடி.

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி – கிளியே!
கவலையெல்லாம் போகுமெடி.

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டலென்
கர்த்தன் திருவடிகள் – கிளியே!
காவல் அறிந்திடெடி.

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி – கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி.

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாட்டைந்தும்
பூமியிற் சொன்னானெடி – கிளியே!
பொல்லாங்கு தீருமெடி.

– யோகர் சுவாமிகள்

# பன்னிரு கை வேலவன்!
# சந்நிதியில் தனி வேல் அவன்!!

**கனக மனோகரன்**
**(சட்டத்தரணி)**

இந்துக்கள் இந்த உலகினில் எங்கெல்லாம் பரந்து வாழ்கிறார்களோ அங்கெல்லாம் சிறந்து விளங்குவது முருக வழிபாடு. அஃது பரத கண்டத்திலும் பரவலாக இடம்பெறுவது. இந்தியாவின் வட புலத்தில் ஸ்கந்த வழிபாடு. தமிழ் நாட்டவர்களோ தமிழ்க்கந்தனை கை தொழுகின்றார்கள். அழகன் முருகனிடம் ஆசை வைக்கின்றார்கள். அவனும் கோல மயிலோடு மட்டுமல்ல, பைந்தமிழ்ப் பண்பாட்டு கோலஎழிலோடும் அவர்கட்குக் காட்சி தருகின்றான்.

முருகு எனில் அருந்தமிழில் அழகையும் குறிக்கும். இளமையையும் குறிக்கும். அழகில் தமிழும் ஆடாத ஆய்மயில்; அசையாத பூந்தளிர்; ஓடாத வள கங்கை; ஒயிலான இளமங்கை எனலாம். அவள்தான் வாழும் மொழிகளில் வயதான இளமகள். சுந்தரத் தமிழ் அணங்கின் சீர் இளமைத் திறம்தனை வியந்து மெய் மறந்து வாழ்த்தியவர் மனோன்மணிய ஆசிரியர் சுந்தரனார் மட்டுமல்லவே!

**தெய்வக் கனலில் ஒரு ஆனவன்!**
**பொய்கைப் புனலில் உரு ஆனவன்!!**

சூரர் குலம் அழிய, தேவர் துயர் அகல, முக்கண்ணன் தனது மூன்றாம் கண் திறக்க ஆங்கு மூவிரு அனற்பொறிகள் பிறக்க, அவை சரவணப் பொய்கையில் தாமரை மலர்களில் ஆறு திருமுருகன்கள் ஆகி, பின்னர் மூவிரு முகங்கள் உள ஒரு முருகனாக உரு எடுக்கிறது. இவ்வுண்மையை இச்செகத்தார் கச்சிதமாய் அறிந்திட கச்சியப்பர் வடித்த கவிதை வரிகள்,

> "அருவமும் உருவுமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
> பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
> கருணைகூர் முகங்களாறு கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
> ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய".

கலியுகத்தார் கலி அகற்ற வந்த திரிபுரம் எரித்த சிவன் மைந்தன் கலியுகக் கந்தன் எனும் அழைபெயரும் கொண்டவன்.

**கலியுக வரதன்**
**கவின் தமிழ்க்குமரன்**

கந்தவேள் கலியுகத்திற்கு மட்டுமல்ல, கவின் தமிழ் உலகிற்கும் தலைவனாக எல்லோராலும் ஏற்கப்படுபவன்; ஏற்றியும் போற்றப்படுபவன்.

தமிழரின் தகைசால் வாழ்வு ஒரு மதம் சார் வாழ்வு. தமிழ் மாந்தருள் இல்லறத்தார் அடிமுடி இலானை முழுமுதற் பிரானாக நினைப்பவர்கள். துறவறத்தார் அந்த ஆதி அந்தமிலான் நினைவில் சொந்த பந்தங்களைத் துறப்பவர்கள். இந்த இருசாரார் வாழ்விலும் முருக வழிபாடு அதி முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது.

அவர்கள் வண்ணமயிலில் வருவானை அண்ணாமலைப் பெருமானதும் உண்ணாமுலை உமையாளதும் அரும்பெறல் பேறாக அங்கீகரித்திருக்கிறார்கள். கந்தவேளை எந்தவேளையும் தொழுதால் நொந்தவேளை அந்தவேள் வருவான், அருள் தருவான் என நம்புகின்றார்கள்.

அவர்கள் மனம் உருகி வழிபடும் முருகன் பிரணவ மந்திரத்தின் பொருள் அறியாத பிரமனையே வருத்தியவன். அப்பொருளை மெய்ப்பொருளான அப்பனுக்கே உணர்த்தியவன்.

அவர்களைப் பொறுத்தமட்டில் பரமசிவனும் சிவகுருநாதன். அவன் இளைய மகனும் சிவகுருநாதன். பின்னவன் சிவனுக்கே குருவாய் அமைந்த நாதன்.

சைவப்பெருமக்கள் தொந்தி உள நாயகனை "முந்தி விநாயகன்" என விழிக்கிறார்கள். அவர்களுள் ஒரு சாரார் "முதல் வணக்கம் எங்கள் முருகனுக்கே" அளிக்கிறார்கள்.

**ஆறுபடை வீடு உடையான்!**
**ஆறுதல் தரு பீடு உடையான்!!**

தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கில் ஆறுமுகனுக்கு ஆலயங்கள் உண்டு. அவற்றினுள் மேதாவிலாசமும் மேலான அருள்வாசமும் கொண்டமைந்தவை ஆறுபடை வீடுகள். ஆறு தலை மீது கொண்டவன் பரமன். ஆறுபடை வீடுகள் கொண்டவன் அவன் குமரன்.

தகப்பன் சாமிக்கு உவப்பான ஒரு மலை சுவாமி மலை. பன்னிரு கையோனின் இன்னோர் இருக்கை திருத்தணிகை. திருத்தணிகையில் தனைப் பணிபவர் துயர் களைகிறான். ஞானப்பழம் நீ என அருகணைவோர்க்கு பழனியில் அருள்மழை பொழிகிறான். திருப்பரங்குன்றில் அவன் சிரிக்கிறான். திருத்தமுள தமிழைத் தினம் ரசிக்கிறான்.

முருகனை "குன்றிருக்கும் இடமெல்லாம் குடி இருக்கும் குமரன்" என்பர். குன்று தோராடல் கொண்டிருப்பவன் எங்கள் குன்றுருவ வேலவன். இந்த மால் மருமகன் மலைகளில் ஆசையோடு வீற்றிருக்கின்றான். அதேவேளையில் அலைகடல் ஓசையையும் கேட்டிருக்கின்றான்.

"கடல் ஆடும் இடம் என்றால் கந்தனுக்கும் ஆசை
அவன் வாழும் இடமெல்லாம் அலைகடலின் ஓசை"

பண்ணொடு அமைந்த பாடலடிகள் இவை.

"ஆசை தரும் இன்பம் ஓர் ஆயிரங்கள் கண்டதிலே
ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ"

என்ற உண்மையை ஓசை நயம் கொண்ட இந்த கவிதை வரிகள் ஒப்புறுதி செய்கின்றன.

கூர்வேல் முருகன் திருச்செந்தூர் நகரில் சந்தக் கடல் நீர்த்திவலைகளில் தான் நனைந்தும் இருக்கின்றான். பக்திப் பரவசக் கடலில் தன் பக்தரை நனைத்தும் இருக்கின்றான்.

**கோவில் வீடு ஆனது!**
**வீடும் கோயில் ஆவது!!**

மனிதர் உறையும் மனைகளை வீடுகள் என்கின்றோம். புனிதத் தெய்வங்கள் உறையும் தலங்களை கோ + இல்கள் என்கின்றோம். இந்த விதிக்கு விலக்காக ஆறுமுகப்பெருமான் உறைகின்ற ஆறு கோவில்களை ஆறுபடை வீடுகள் என்கின்றோம் ஏன்?

"பள்ளித் தலம் அனைத்தும் கோவில் செய்குவோம்"

நாமகள் உறையும் கூடங்களை நான்மாடக் கோவில்களாகக் காண விழைந்தவன் பாரதி என்ற பாட்டுக்கு ஒரு புலவன். நேருஜி என்ற பாரத நாட்டு நல்முதல்வன் கல்விக் கூடங்களில் மட்டுமல்ல, உற்பத்திச் சாலைகளிலும் கோவில்களைக் கண்டு மகிழ்ந்தனன். பள்ளித் தலங்கள் மட்டுமல்ல

தனிமனிதர் அகங்கள் கூட கோவில்கள் ஆகிவிட முடியும். நாம் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வோம் என்னில், அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றுவோம் என்னில், எமது உள்ளங்கள் கபடங்கள் இல்லாத இதய கமலங்கள் ஆக இருக்கும் என்னில், எங்கள் இல்லங்கள் தானங்கள், தர்மங்கள் தங்கும் தடாகங்கள் ஆக நிலைக்கும் என்னில், எங்கள் மங்கையர்கள் மாதவர்களாக இருப்பர் என்னில், அவர்தம் பங்கயக் கைநலம் பாரில் அறங்கள் வளர்க்கும் என்னில், அன்பினதும் அறத்தினதும் இருப்பிடங்களாக அவர்கள் இருப்பிடங்கள் இருக்கும் என்னில் அங்கு வடிவேலன் வருவான்; வள்ளி தெய்வானையோடு உறைவான். மைந்தனைக் காண திரிசூலனும் திரிபுர சுந்தரியுடன் வருகை தருவான். மருகன் இடத்து மனையவள் அலைமகளோடு மாலவனும் வந்து போவான். இந்நிலையில் எங்கள் வீடுகள் கல்லாய், மண்ணாய், கதவாய், நிலையாய், நிமிர்ந்து நிற்கும் வீடுகளாக அல்ல, கடவுள்கள் நிசமாய், - நிலையாய் அமர்ந்திருக்கும் கோவில்களாக மாறிவிடும். "கோ"கள் வந்தால், உறைந்தால் அந்த இல்கள் எல்லாம் கோவில்கள் தாமே!

**ஈழத்துத் திருத்தலங்கள்!**
**இணையில் புகழ்த் தலங்கள்!!**

தாய்த் தமிழகத்தையும் சேய்த் தமிழீழத்தையும் உவர்க்கடல் ஊடறுப்பது என்னவோ உவர்ப்பான உண்மைதான்! எனின், இனிய தொப்புள் கொடி உறவு அறுக்கின்ற ஆற்றல் அதற்கேது? பேசும் இனிய மொழியால், பின்பற்றும் புனித மதத்தால், வழிவழி வரும் வரலாற்றால், கலையால், இலக்கியத்தால், கலாச்சாரப் பாரம்பரியத்தால், நடையால், நாடி உடுக்கும் உடையால், பழக்க வழக்கத்தால், பண்பாட்டால், பாவனையால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இணைப்பையும் இறுகிய பிணைப்பையும் அறுப்பதும் இடைப்பிரிப்பதும் எங்ஙனம் இயலும்?

கந்தன் வழிபாடுங்கூட ஈழத் தமிழத் தலங்களை தமிழகத்தோடு பின்னிப் பிணைக்கின்ற இன்னோர் பக்திப் பாலம் எனலாம். திருமுருகன் பெருமைகளை திருப்புகழ் வாயிலாகக் காட்டவும் நிலைநாட்டவும் விழைந்தவர் அருணகிரிநாதர். அன்னவர் தன் இட்ட தெய்வத்தைச்சுட்ட,

"குறமாதைப் புனர்வோனே! குகனே சொற் குமரேசா
கறையானைக் கிளையோனே"

என அடுக்கடுக்காக அழை பெயர்கள் வைத்து அடுக்குத் தொடர் அமைத்ததோடு அமைந்திலர். தொல் புகழோடு இலங்கையின் தென் புலத்தில் எழுந்தருளி இருக்கும் கதிர்காமப் பெருமாளையும் நினைந்தனர்.

ஈழத்தில் முதல் அணியில் இருக்கும் முருக தலங்களுள் அதி முக்கியத்துவம் பெற்றது கதிர்காமம். திருப்புகழில் கறையானைக்கு இளையோனே அடுத்தே கதிர்காமப் பெருமாளே என விழித்தார் அருணகிரி என்ற அருந்தமிழ்ச் சந்தக் கவி. இன்றோ கதிர்காமத்தில் கறையான் புற்றில் கருநாகம் புகுந்த நிலை. கந்தசாமி இருக்கும் தலத்தில் "புத்தம் சரணம் கச்சாமி" உச்சஸ்தாயியில் ஒலிக்கிறது. புத்தர் வாக்கு மனிதநேயம் பொதிந்தது. ஆனால், அவரை கதிர்காமத்தில் புகுத்தியோர் போக்கும் நோக்கும் இனத்துவேசம் நிறைந்தவை.

**நல்லைப் பதியினில் உறைபவன்!**
**தொல்லை தீர் நற் துணையவன்!!**

முந்நாளில் தமிழ்க் காவலர் உறைந்த, பிந்நாளில் நாவலர் பிறந்த நல்லை நகரின் காவலனும் ஒரு கந்தன்தான். அவன் பட்டினவாசி. அவன் பட்டு, பகட்டு, படாடோபத்தோடு பார்ப்பவன் கண்களை ஈர்ப்பவன். இரப்பவர் தேவை உணர்ந்து சுரப்பவன். பங்கம் வருகையில் எல்லாம் தஞ்சம் என வருபவர்க்கு தன் பளிங்கு மனையைப் பகிர்ந்து கொடுப்பவன்.

அனுதினமும் வரும் பக்தரையும் அகதிகளாய் வருவோரையும் வரவேற்ற இந்தக் கந்தனை ஒரு பாவாணன் வரவேற்று சுந்தரத் தமிழில் சோபனங்கள் கூறுகின்றான்.

"நாவலர் வந்துதித்த நல்லூர் நற்பதி
முருகா வா வா
காவலர் இருந்த நல்லூர்க் கார்த்திகைக்
குமரா வா வா"

**ஆற்றங்கரையில் உறைபவன் !**
**ஏற்றம் மிகுந்த துணை அவன்!!**

கதிர்காமத்தில் கந்தன் மாணிக்க கங்கையின் கரையில் திருக்காட்சி தருகின்றான். அருள் ஆட்சி புரிகின்றான். வெருகல் பதியினில் மகாவலி கங்கை கடலினில் கலக்கும் இடந்தான் சித்திவேலாயுதனின் இன்னொரு நித்திய இருப்பிடம்.

வடக்கினை நோக்கிச் செல்லின் வரையினை நதியினைக் காணோம்
நடனம் அங்கு காண்போம் நாலவர் பெருமை காண்போம்
கடலென முழங்கி ஓங்கும் கன்னியாம் தமிழைக் காண்போம்.

என்றறைகின்றது நல்லூர்க் கந்தன் பாமாலை. ஊண்மைதான்! வடக்கில் வான்முட்டும் வரைகளோ, வற்றாத வளநதிகளோ இல்லை. வற்றும் ஒரு

தொண்டமான் ஆறுண்டு. இந்தத் தொண்டமானாற்றின் தரைதனில் வற்றாப்பளைக் கண்ணகைத் தாயின் கனிஷ்ட பிள்ளை குடிகொண்டு வற்றாத அருள் சுரக்கின்றான்.

ஈழத்தில் இவனும் இன்னோர் ஆற்றங்கரையான். உற்சவ வேளைகளில் ஆயிரம் ஆயிரம் அன்பர்கள் இவனை நாடி வருவர்; பாவலர்கள் - பாணர்கள் பாடி வருவர். அழகுக் காவடிகள் ஆடிவரும். இவன், ஏழைமையோடு தோழமை பூண்டவன். எளிமைத் தோற்றம் கொண்டவன். அனுதினமும் ஆயிரம் அற்றார் அழிபசி கொன்றவன். அன்னதானக் கந்தன் என்னும் அர்த்தமுள்ள பெயரும் கொண்டவன்.

**பன்னிரு கை வேலவன்!**
**சன்னிதியில் தனிவேல் அவன்!!**

பேராதனையில் ஏற்றமிகு மலையினில் வீற்றிருக்கையில் இவன் குறிஞ்சிக் குமரன். நெய்தல் நிலத்தினில் செல்வச் சந்நிதித் தலத்தில் இவன் செல்வக்குமரன். அங்கே தொண்டமான் ஆற்றங்கரையினில் இருக்கிறான். ஊற்றென அருள்வரம் சுரக்கிறான்.

பன்னிரு கை வேலன், தணிகைவேலன் என்றெல்லாம் அழைபெறும் உமை அன்னையின் பாலன் இச்சந்நிதியில் தனிவேல் உருவில் காட்சி கொடுக்கின்றான்.

இம் முருகன் நாடுவார் உள்ளங்களில் இடங்கொண்டிருப்பவன் மட்டுமல்ல, நாற்பத்தைந்து மடங்கொண்டிருந்தவன். அகவை முதிர்ந்தவர், அங்கம் சிதைந்தவர். அனைத்தும் இழந்தவர் இன்னோரன்ன அனைத்து மாந்தரையும் தாயாய் அரவணைத்து நாளும் ஆதரித்த தெய்வம் இவன். தாவாரம் இன்றி தமக்கென வீடின்றி இருந்த அனைவருக்கும் ஆதாரமாய் அமைந்த நற்பதி இவன் சந்நிதி.

சில நூற்றுவர் இவனொடு இருந்தனர். பல நூற்றுவர் இவனைத் தினம் அருகணைத்தனர். எனவேதான் இந்தச் சன்னிதியானை நோக்கி சந்தத் தமிழில் வல்வை இயற்றமிழ் போதகாசிரியர் வயித்திலிங்கம்பிள்ளை அவர்கள் பா ஆக்கியுள்ளார்.

"தோத்திர மிசைத்திடு மடியவ ரொருபால்
கற்றியஞ் சலிசெயு மடியவ ரொருபால்
காத்திடு எனவரு மடியவ ரொருபால்
கைகுவித் தேதொழு மடியவ ரொருபால்

பூத்திரன் சிந்திடு மடியவ ரொருபால்
பொற்புர வெங்கணு நிறையவந் தெடுத்தார்
நேத்திர மணியென குருபர வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே"

**அவுணர் சேனை வென்றவன்!**
**மௌன பூசை கொண்டவன்!!**

முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமையன் ஆன சிவனின் மைந்தனாகிய இவனும் பின்னைப் புதுமைகளை விளைவித்த பெற்றியன் தான்!

வேடனாய், காடனாய் விபரமறியா மூடனாய் இருந்த கண்ணப்பனை நாயனார் நிலைக்கு ஆறு தினங்களில் உயர்த்தியவன், அறுமுகனைப் பெற்ற திரிபுரன். துன்பிராணனை விடஎம் பிரானைப் பெரிதென மதித்த நந்தனாரை "மறைமுனிவன்" எனும்பதம் பாவித்து மகிமை செய்கிறது பெரியபுராணம்.

அந்தணரை அறவோன் என்கின்ற செந்நாற்போதம் செந்தண்மை பூண்டொழுக வேண்டிய வரையறையை அன்னவர்க்கு வகுத்தது. "குணத்தால்தான் தொழில, உயர்குண இயல்புகள் பெறுபவன் அந்தணன் ஆகலாம்" என்கின்றான் பார்த்தனுக்குக் கீதை சொன்ன கீர்த்தன்.

கதிர்வேலனும் கதிர்காமன் என்ற வலைஞனைப் புனித பூசை வினைஞனாக்கி புதுமை செய்த இடம் இப்புனித தலம் ஆகும். இன்னோர் உன்னத பெருமைக்கும் உரியன் இச்சந்நிதி முருகன். அவுணர் சேனையை அழிக்க அவதரித்த திருமுருகன் மௌன பூசை கேட்டு, அதை ஏற்று மகிழ்ந்திருக்கும் புகழ்ப்பதியும்இதுதான்!

சூரபத்மனுடன் வெஞ்சமர் தொடரமுன்னர் அவனிடம் செஞ்சுடர் வேல் வீரவாகு தேவனை தூது அனுப்பினான். சூரனிடம் போகையிலும் அவனைக் கண்ட பின் மீள்கையிலும் அப்பெரு வீரன் இரு வழிபாடுகளை செல்வச்சந்நிதியில் மேற்கொண்டதால் செல்வச்சந்நிதிக்கு புராணக் கதையில் இடம்பெற்ற புராதன புகழும் உண்டு.

**உக்கிரம் கொண்டவன்**
**அக்கணம் கொன்றனன்!**

முருகன் அழகு மயில் மீதினிலும் வலம் வருவான். அசைந்து வரும் தேரிலும் ஒரு தினம் வருவான்.

“வாறான் வாறாண்டி வேலன்
தேரில் வாறாண்டி”

என்றறைவது அண்ணாமலை தாசரின் காவடிச்சிந்து. நித்திலம் கொழிக்கும் கடல் அருகில் குடியிருக்கும் சித்திரவேலனை சித்திரத் தேரினில் வீதி வலம்வர வைத்திட அன்னவனை நண்ணிடும் பக்தர்கள் எண்ணினர். எண்ணியவர் திண்ணியவர். பெரும் பொருட் செலவோடும் பெரும் பேரழகோடும் பெரிதாமோர் சித்திரத்தேர் ஒன்றினைப் பண்ணியவர் வெள்ளமெனப் பக்தர் குழாம் பங்கெடுத்திட வெள்ளோட்டம் பார்த்தனர்.

அதன்பின்னர், இரு வருடாந்த உற்சவங்களில் மட்டும் சித்திர வேலவன் சித்திரத் தேரினில் பெருவீதி வலம் வந்தனன். பக்தர்கள் பேரானந்தத்தில் மிதந்தனர்.

“கன்னனையும் தேரழித்தான்”

ஆபிமன்யுவின் வில்லாற்றலை வில்லிபுத்தூரார் பாரதம் இங்ஙனம் வியந்தோதுகின்றது. கன்னன் தேரை அழித்தவன் உண்டு. கந்தனும் தேர்கள் அழித்தலும் உண்டு. கந்தன் தேரை அழித்தவர் இருந்திலர்.

எனின், *21.04.1986* அன்று இலங்கைப் படையினருள், இனவெறி கக்கிடும் தேரர் வழி நின்ற தேரார் சிலர் செல்வச்சந்நிதியானின் சித்திரத்தேரினை எரித்தனர்.

அன்று கொல்வது ஆள்பவன் நீதி; நின்று கொல்வது ஆண்டவன் நீதி; நியதியும் அஃதே. கந்தவனின் வெஞ்சினம் கொந்தாரழல் போல் கெந்தி எழுந்திருக்கவேண்டும். வக்கிரம் கொண்டவர் புரிந்த இந்த அக்கிரமம் முக்கண்ணனின் மகனை உக்கிரம் கொள்ள வைக்க, அக்கணமே அவன் அவர்களுள் அறுவரை வதம் செய்தான். அவன் ஆலயத்தின் முன்புறத்தில் ஆண்டாண்டு தோறும் அவனது பக்தர்கள் அவனுக்காக தீமிதிக்கும் அதே இடத்தில் அத்தீயவர்களின் உயிரை திருமுருகன் பறித்தது ஒரு வெறும் காகதாலிக நிகழ்வு என்று கொள்வற்கில்லை!

**வேலனாய்ப் பிறந்தவன்**
**பாலமாய் அமைந்தனன்!**

ஆறு உட்பிரிவுகளைக் கொண்டிருப்பது இந்துமதம். அவற்றினுள், சைவம் முதன்மையானது. சைவர்கள் மொழிவது ஆதியும் அந்தமும் இல்லாத செந்தமிழ். பணிவது அடியும் முடியும் இலான் பாதமலர்கள். அவர்கள் சிவனை எந்நாட்டவர்க்கும் இறைவனாய்க் கண்டார்கள். எனின், தென்னாடுடைய சிவன் தமக்கே சொந்தம் எனக் கொண்டார்கள். நீலமேனி நெடியோனான

மகா விஷ்ணுவையே வைஷ்ணவர்கள் வழிபட்டார்கள். சாக்தர்கள் ஆதிசக்தியை ஏக சக்தியாய் ஏற்றிருந்தார்கள். காணாபத்தியர்கள் கணபதியாம் கரிமுகனை தினம் பணிந்தனர். கௌமார மகத்தவர்கள் கடம்பனையே தம் இடும்பை தீர் இறைவனாக வரித்தனர். பாரதியும்,

"பச்சைத் திருமயில் வீரன்
அலங்காரன் கௌமாரன்"

எனத் ன் காவடிச் சிந்துவில் பாவடித்துள்ளான். சௌர மதத்தவர்கள் ஆகாய வீதியில் உலாவரும் ஆதவனே தமக்கு சகல நலன்களையும் சௌபாக்கியங்களையும் தருவான் என நினைத்தனர்.

கருத்துக்களுக்காகக் காலங்கள் அல்லவே! காலங்கள் மாறக் கருத்துக்கள் மாறின. இந்துமதத்தின் உட்பிரிவுகள் உட்பகை மறந்தன. உடன்பாடுகள் கண்டன. அதிசயப்பொருட்கள் அனைத்தும் இடம் பெற்றிருக்கும் அருங்காட்சியகம் போல இன்று அனைத்துத் தெய்வங்களும் ஒரே கோவிலில் குடிகொண்டு கூட்டாட்சி நடத்தவும் எமக்கு அருட்காட்சி கொடுக்கவும் காண்கின்றோம்.

தெய்வங்களுள் இளைய தெய்வமும் இதர தெய்வங்களுக்கு இனிய செல்வமும் உமைபாலன்தான். திருமுருகன் அம்மையப்பனுக்கும் அகிலாண்டேஸ்வரிக்கும் திருமகன். திருமாலுக்கும் திருமகளுக்கும் மருமகன் (மால்மருகன் என்ற பதம் இளைய மருமகனாம் முருகனையே தொட்டணைக்கப் பார்க்கிறோம்) தேவர் கோனுக்கு இவன் மருகிப் பெற்ற மகன்; மறுமகன்; மறுமகனுந்தான். பிள்ளையாருக்கு இவன் பிள்ளையான்; தெய்வ பாலன் இவன்; தெய்வங்களின் உறவுக்குப் பாலமும் இவன்!

**தமிழ்ப்பித்துள்ள கந்தன்**
**தமிழ்ப் பித்தனின் மைந்தன்!**

அநாதியான சிவனுக்கு அமுது அன்ன தமிழில் உள்ள பிரியம் அலாதியானது. எனவேதான், அந்த அடியொடு முடியிலான் சேக்கிழார் பெருமானுக்கு வடிவுடைத் தமிழில் அடி எடுத்துக் கொடுத்து பெரியபுராணம் என்ற அருந்தமிழ்ப் பனுவல் உருவாக வழிகோலினான்.

அந்த அத்தனை விழித்து பித்தன் என அழைக்கின்றார் சுந்தரர். பின்னர் அந்த இறையனாரை அருகணைந்து அதே நாயனார் தனக்குப் "பாடும் பணி வேண்டும்" எனக் கேட்டுப் பணிகின்றார். இசை கொண்டு இசை கண்டு வாழும் இன்தமிழில் விடுக்கப்பட்ட வேண்டுதலுக்கு இசைகின்ற எம்பிரான், "சொற்றமிழால் என்னைப் பாடுக" எனப் பணிக்கின்றார். தனைப்

"பித்தா" என அழைத்த சுந்தரமூர்த்தியை மும்மூர்த்திகளுள் முதல் மூர்த்தி "பித்தா" என்றே பாடலைத் தொடங்கிடக் கேட்கிறார். நாதமும் பரதமும் தன்னிரு கண்களாய்க் கொண்டவன் சிவநாதன். இவன் நாதத்தோடு சாமவேதத்தைக் கேட்டு மெய்மறந்தே கையிலங்கிரியில் கைதியாய் நசிந்த இராவணனை விடுவித்தனன்.

"இசையின் மயங்காத பேர்கள் உண்டோ?
இறைவனே இசையின் வடிவம் எனும்போது".

வையகத்தை உய்ய வைப்போன்!
வைதாரையும் வாழவைப்போன்!!

காவேரியும் வைகையும் வையகத்தார் அங்கீகரிக்கின்ற தகைமை வாய்ந்த தமிழ்ப் பெருநதிகள்; தமிழகத்தின் அருநிதிகள். வடபுலத்துக் கங்கை நாட்டின் சிறப்பினை செப்ப முற்பட்ட கம்பனின் பாவரிகள் காவிரியின் மேன்மையையும் காட்டா நிற்கின்றன.

"காவிரி நாடென்ன கழனிநாடு"

உயர்வினை எடுத்துக்காட்ட முற்படுகையில் எடுத்தாளும் உவமானம் உவமேயத்தை விஞ்சி இருப்பதே விதி; பொது நியதி; இல்லையா?

சங்கம் அமைத்து பங்கம் இலாது தமிழ் வளர்த்த மா மதுரை வளநகரின் உடல் தழுவி ஓடும் புகழ் நதி வைகை. மதுரை மீனாட்சித் தாயை வைகைக் கரை வாழ் வைஷ்ணவித் தாய் என்பர்.

வைகைத் தாய்க்கு மட்டுமல்ல வடிவன் சேய்க்கும் மாறாத காதல் வைகைத் தமிழ் மீதில். அப்பனுக்கும் தமிழ்ப்பித்து. தமிழில் பித்தன் என அழைத்தது சிவன் அவன் சித்தம் குளிர வைத்ததை ஏலவே பார்த்தோம். மகன் சுப்பனின் சுபாவமும் அத்தன்மையதே. அவனும்,

"முத்தமிழால் வைதாரையும் வாழ்விப்பேன்"

இவ்வண்ணம் திருப்புகழ் பாடிய வாயால் தமிழ்ப்புகழ் பாடியவர் அருணகிரிநாதர்.

**கிழவி பெற்றது நாவற்கனி!**
**குழவி கேட்டது பாவில் கனி!!**

முருகன் ஆறுபடை வீடொன்றில் திருவேரகன். தாரகன் மார்பைப் பிளந்த கூர் வேலவன். தமிழ் கூறும் நல்லுலகிற்கு இளங்காவலன். உமை அன்னைக்கு இவன் பாலகன். உலகோர் எமக்கும் இவன் மூப்பு இல்லாப் பாகன். தமிழ் மொழியும் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றி

மூத்த அன்னை தான். எனின், காலங்கடந்து வாழினும் அவள் கன்னி தான். மூப்பு என்பது தமிழ் அன்னைக்கும் இல்லை. உமை பிள்ளைக்கும் இல்லை. முத்துக்குமரன் அழகும் முத்தமிழ் எழிலுங்கூட நித்தியமானவை.

தமிழர் நாம் அழகன் முருகனிம் ஆசை வைத்திருக்கின்றோம். அங்ஙனே, அவனும் அழகுத் தமிழ் அணங்கின் இடத்து ஆசை வைத்திருக்கின்றான்.

ஔவையார் நாநிலம் போற்றும் நற்றமிழ்க் கவி. அவர் அதியமானிடம் நெல்லிக்கனியும் குமரவேளிடம் நாவற்கனியும் பெற்ற நறுந்தமிழ்க் கனி. ஔவைக்கிழவி வாயால் அமுதத் தமிழைக் கேட்கும் ஆவல் உந்த முருகன் என்ற சிறுவன் கானமயில் விட்டிறங்கி நாவல் மரம் ஏறியதும், சுட்ட பழத்தை அகவையிலும் அறிவினிலும் முதிர்ந்த கிழம் பெற்றதுவும், அதன் தருக்கு அற்றதுவும் அனைவரும் அறிந்ததே!

**வேலும் உண்டுவினை தீர்க்க!**
**வினையும் உண்டு வேல் தீர்க்க!!**

வேலவனின் மெய்யடியார்கள் வேல் அதனைத் தொழுபவர்கள்; வேல் நினைவில் துயில் எழுபவர்கள். வேல் உண்டு வினை தீர்க்கும் எனும் நினைவில் வாளோ வேலோ எடுக்காது வாளாயிருப்பவர்கள்.

ஈழத்தமிழ் முருக பக்தர்களோ இன்று வேல்சாமியை நோக்கி,
"சோதனை மேல் சோதனை போதுமடா சாமி
வேதனை தான் வாழ்க்கை என்றால் தாங்காது பூமி"
எனப்பாடி தங்கள் அவலத்தை – ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றார்கள்.

"சூரர் சூலம் அழியவந்த சண்முகா – உன்
சொந்த இனம் அழிய முன்னே ஓடிவா
வீரமிகு தமிழ் மானம் விழுவதா? – முருகன்
வேலை நம்பி இருப்பவர்கள் அழுவதா?"

விநாயகர் தம்பியை விழித்து ஓர் ஈழத்து எழுச்சிக் கவிஞன் எழுப்பிய வினாக்கள் இவை. சூரபத்மன் இருகூறு பட்டொழியப் போர் முடித்த குமரனின் வேல் தன் வேலையை ஏன் மறந்தது? முருக பக்தர் பலரும் பரவலாக எழுப்பும் கேள்வி இது.

ஈழத்தில் எம் இளவல்கள் போராற்றலில் காட்டிடும் பேராற்றல் வெற்றிக்குப் போதுமானது. வேலவா நீ வேல் எடுக்க வேண்டாம். போர் தொடுக்கவேண்டாம். பகை முடிக்கவேண்டாம். பகைமை முடி! தொடரும் அழிவைத் தடு! குருதிக் குளிப்பை நிறுத்து! நிலையான நிம்மதியை மீண்டும் பெற்றுக்கொடு. தமிழர் நாம் இழந்த தாய் மண்ணை மீட்டுத்தா. ஆண்ட உன் தமிழ் இனத்தை மீண்டும் ஆளவை. அனைவரையும் அமைதியாய் வாழ வை. அது போதும்! முத்தமிழும் முருகன் புகழும் நிலைபெறட்டும்!!

நன்றி:
தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி
முருகன் ஆலய மாமணி சிறப்பு மலர்.

## திருச்சந்நிதிப் பதிகம்

**சீர்பூத்த தினகரப் பிரகாச மொருகோடி**
**செறிவுற்ற திருவதனமுஞ்**
**சித்திக்கு மன்பர்களை தீரவே யருளொழுகு**
**திருநயன மோரிரண்டு**
**மேர்பூத்த திருநீறிலங்கு திரு நெற்றியு**
**மிறையிடப் பாகமேவு**
**மின்னருட் பாலுண்ட சின்னவா யுந்நன்ன**
**ரிளநகையு மபயவரத**
**நேர்பூத்த விருகரமு மிருசெவியு முபயரவி**
**நேர் குண்டலங்களுஞ்சீர்**
**நின்றசெங் கமலமல ரொன்றுதிரு வடிகளோடு**
**சேர்நின்ற பாலவடிவாய்**
**தார்பூத்த பொற்சிலம் பழயனேன் காணவே**
**சாமிவந் தருள்கசெல்வச்**
**சந்நிதித் தலவாச சின்மயக் குருராஜ**
**சண்முகக் குமரேசனே.**

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
# கைலாயவாகனத் திருவிழா 21-08-2018






திருவருள்மிகு
தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்

Print Master. T.P. 021-205 3322